Issue 31

# உருமு தனலெட்சுமி கல்லூரி
# நமது வளாகம் – செய்தி மடல்

உழைப்பே உத்தம தொழுகை

Oct. 2019



*சிலம்பு அடியோசை போல, சிறந்த இசை வேறில்லை!*
*சிலம்பக் கலைக்கு நிகரான கலை வேறிங்கில்லை!!*

என வாழ்ந்த வீரத்தமிழ் மரபின் வழித்தோன்றலாய் நம் கல்லூரியின் தமிழ்த்துறை முதலாமாண்டு மாணவன் பன்னாட்டுச் சிலம்பப் போட்டியில் வென்று தங்கப்பதக்கம் பெற்றது. 'கற்றுக்கொள்ள முயற்சிப்பதும் கற்றுக் கொண்டதைச் செயல்படுத்துவதும் வெற்றிக்கான இரகசியங்கள்' எனும் உண்மையை மாணவர்களுக்கு உணர்த்திய நுண்ணுயிரியல் துறையின் மருந்துத் தொழிற்சாலை குறித்தக் கருத்தரங்கம், சமூக நல்லிணக்கத்திற்குத் தமிழிலக்கியங்கள் ஆற்றிய பங்களிப்பு குறித்தத் தமிழாய்வுத்துறை நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கம் மற்றும் மாணாக்கர் அரங்கம், ஆலம் விழுதாய் மூத்தோரைப் பேணிக்காப்பது இளையோரின் பொறுப்பு என்றுணர்த்தும் ரோட்டரி சங்க மாணவர்களின் செயல்பாடு ஆகிய செய்திகளுடன், அன்பு எங்கும் நிறைந்து மகிழ்ச்சி எங்கும் பொங்க அனைவரும் இணைந்து கொண்டாடும் இனிய தீபாவளித் திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறது இந்தச் செய்திமடல்...

– வாழ்த்துகளுடன், ஆசிரியர் குழு.

| ஆசிரியர் குழு | |
|---|---|
| | முனைவர் ந. கண்ணன் |
| | முனைவர் தே. இந்திரகுமாரி |
| | முனைவர் S. ஞானபிரகாஷ் |
| | முனைவர் B. பிரதீபா |
| | முனைவர் கு. வடிவேல்முருகன் |
| | திரு. R. சுவாமிநாதன் |
| | திரு. S. கார்த்திக் சரவணன் |

| நிர்வாகக் குழு | |
|---|---|
| | திருமதி பத்மா இராமகிருஷ்ணன், தலைவர். |
| | திரு. கல்கி இராமகிருஷ்ணன், செயலர். |
| | திரு. G.N. சீனிவாசன், பொருளாளர். |
| | Dr. மோதி P. கிருபா சங்கர், நிர்வாகக்குழு உறுப்பினர். |
| | முனைவர் E.R. இரவிச்சந்திரன், கல்லூரி முதல்வர். |

You could follow us on
udcnewsletters@gmail.com

## சிலம்பம் போட்டியில் தங்கப் பதக்கமும் கின்னஸ் சாதனையும்







மலேசியா சிலம்பம் அகாடமி மற்றும் ஆசிய சிலம்பம் அகாடமி அமைப்புகள் மலேசியாவில் நடத்திய உலகச் சிலம்பப் போட்டியில் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து 150 - க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். இந்தியாவின் சார்பாகக் கலந்து கொண்ட அணியில் நமது கல்லூரியின் இளங்கலைத் தமிழிலக்கிய முதலாமாண்டு மாணவர் பொ.கிருஷ்ணன் போட்டியில் தலைமையேற்றுத் பங்கேற்றுத் தங்கப் பதக்கமும் வெள்ளிப் பதக்கமும் வென்றார். மேலும், சிலம்பக்கோலின் இரு முனைகளிலும் தீப்பந்தமேற்றி 3 மணி நேரம் இடைவிடாமல் சுற்றி, கின்னஸ் சாதனையும் செய்து அதற்குரிய பதக்கமும் பெற்றுள்ளார். தங்கம் வென்று சாதனை செய்த நம் மண்ணின் மைந்தனை மனதார வாழ்த்துவோம்...

## தமிழ்த்துறை - பன்னாட்டுக் கருத்தரங்கமும் கல்விசார் ஒப்பந்தமும்





28.09.2019 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் துறையும், நம் கல்லூரித் தமிழாய்வுத்துறையும் மலேசியத் தமிழ்மணி மன்றமும் இணைந்து "சமூக நல்லிணக்கத்திற்குத் தமிழிலக்கியங்கள் ஆற்றிய பங்கு" குறித்து ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கினைத் தமிழாய்வுத்துறை நடத்தியது. நம் கல்லூரி முதல்வர் முனைவர் இ.ஆர். இரவிச்சந்திரன், மலேசியத் தமிழ்மணி மன்ற தேசியத் தலைவர் திரு.சு.வை. லிங்கம், மலேசியத் தமிழ்மணி மன்றத் தேசியச் செயலர் திருமதி இரா. கோகிலவாணி, நம் கல்லூரி இயக்குநர் முனைவர் D. கிறிஸ்டி செல்வராணி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் துறைத்தலைவர் முனைவர் போ. சத்தியமூர்த்தி, பாரதிதாசன் பல்கலைக்கழகத் தேர்வு நெறியாளர் முனைவர் க.துரையரசன், ஜமால் முகமது கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் அ. சையத் ஜாகீர்ஹசன், தூய வளனார் கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் இ. சூசை ஆகியோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் கல்விசார் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறப்பட்டன.

## நுண்ணுயிரியல் ஆய்வகப் பயிற்சி



நுண்ணுயிரியல் துறை சார்பாக 23.09.2019 அன்று நடைபெற்ற சிறப்புக் கருத்தரங்கில் துறையின் முன்னாள் மாணவர் முனைவர் ஜெ. ராஜேஸ்குமார், தலைவர், தரக்கட்டுப்பாடு, Green Signal Biopharama Limited, சென்னை அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்து, 'மருந்துத் தொழிற்சாலையில் நுண்ணுயிரியல் ஆய்வகப் பயிற்சி' என்ற தலைப்பில் உரையாற்றினார். அதில் மாணவர்கள் மருந்துத் தொழிற்சாலையில் உள்ள நுணுக்கங்கள், நுண்ணுயிர் ஆய்வகப் பயிற்சி மேற்கொள்ளும் முறை, மருந்துத்துறையில் உள்ள வேலைவாய்ப்புகள் போன்றவற்றைத் தெளிவாக எடுத்துக் கூறியதோடு கலந்துரையாடலும் நடைபெற்றது. கல்லூரி முதல்வர், சுயநிதிப்பிரிவு இயக்குநர், துறைப்பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பலர் பங்கேற்றனர்.

## Rotary Club Programme

18.09.2019 அன்று நமது கல்லூரி ரோட்டரி சங்கத்தின் அலுவல் குழு உறுப்பினர்கள், மாணவர்கள் பேராசிரியர் திருமதி இரா. அங்கயற்கண்ணியின் வழிகாட்டுதலுடன் காட்டூரில் உள்ள செயின்ட் அந்தோணி முதியோர் இல்லத்திற்குச் சென்று அங்குள்ள முதியோர்களிடம் கலந்துரையாடினர். முதியோர்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர்களுக்கு ரோட்டரி சங்கத்தின் சார்பில் புத்தகங்கள், பழங்கள், பலகாரங்கள் வழங்கப்பட்டன. சகோதரி அருள் அவர்கள் நம் மாணவர்களின் சேவையைப் பாராட்டியுள்ளார்.

**'எனக்கு ஒரு பிரச்சனை' என்று ஒருபோதும் சொல்லாதீர்கள்.**
**ஏனெனில், பிரச்சனை என்று சொன்னாலே கவலையும் பயமும் கட்டாயம் வரும்.**
**'எனக்கு ஒரு சவால்' என்று சொல்லிப் பாருங்கள்.**
**தைரியமும் தன்னம்பிக்கையும் தானாகவே வரும்**

## மாணாக்கர் அரங்கம்





நம் கல்லூரித் தமிழாய்வுத்துறையின் உ.வே.சா. தமிழ்மன்றமும் திருச்சிராப்பள்ளி பொங்குதமிழ் இளையோர் இயக்கமும் இணைந்து 04.09.2019 அன்று "மாணாக்கர் அரங்கம்" நடத்தியது. நிகழ்ச்சிக்குக் கல்லூரி நிர்வாகக்குழுத் தலைவர் திருமதி பத்மா இராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் புலவர் செந்தலை ந. கவுதமன் 'வாழையடி வாழை' என்ற தலைப்பில் வாழ்வியல் உரை நிகழ்த்தினார். பொங்குதமிழ் இளையோர் இயக்கத்தின் மேலாண்மை அறங்காவலர் முனைவர் தி. நெடுஞ்செழியன் வரவேற்புரையும், புலவர் க. முருகேசன் நோக்கவுரையும், கல்லூரி முதல்வர் முனைவர் இ.ஆர்.இரவிச்சந்திரன் தொடக்கவுரையும் ஆற்றி மாணவர்களை ஊக்கப்படுத்தினர். தூய வளவனார் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவரும் பொங்குதமிழ் இளையோர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருமாகிய பேராசிரியர் இ. சூசை சிறப்புரையாளரை அறிமுகப்படுத்தினார். தொடர்ந்து, போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழாய்வுத்துறைப் பொறுப்புத் தலைவர் முனைவர் ந. விஜயசுந்தரி நன்றியுரை வழங்க மாணவர்கள் த. ஜீவன் அரவிந்தன், ம. தனஸ்ரீ நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினர்.